[1978 செப்டம்பர் 14

## காவேரிப்பட்டணத்தை வட்டத் தலைநகரமாக்கல்.

*வினா எண் 221—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு தயவு செய்து விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் காவேரிப்பட்டணத்தை வட்டத் தலைநகராக்க அரசு ஏதேனும் செயல் திட்டம் வைத்துள்ளதா?

(ஆ) 1972-ல் அரசு அதற்கான செயல் திட்டத்தைப் பரிசீலித்து பூர்வாங்க வேலைகளை முடித்துள்ளது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) & (ஆ) இல்லை.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, தருமபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி வட்டத்தை இரண்டாகப் பிரித்து காவேரிப்பட்டணத்தை ஒரு வட்டமாக்க வேண்டும் என்று 1972-லே ஒரு தீர்மானம் அரசுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது என்பதை நான் அறிகிறேன். அது தவிர அண்மையிலே நடைபெற்ற மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட மாவட்ட ஆட்சித் தலைவரால் இப்படிப்பட்ட ஒரு தீர்மானம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே தயவு செய்து மீண்டும் பரிசீலனை செய்து தகுந்த முடிவினை அறிவிக்க முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, அது மீண்டும் பரிசீலிக்கப்படும். ஆனால் அவர் சொல்வது போல் இதுவரை எந்தவிதமான தீர்மானமும் அரசுக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மதுரை மாவட்டத்தில் எடுக்கப்பட்ட உபரி நிலங்கள்

* வினா எண் 222—திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உடைமை உச்ச வரம்பு நிச்சயிப்பு ) சட்டத்தின்கீழ் மதுரை மாவட்டத்தில் எடுக்கப்பட்ட உபரி நிலம் எவ்வளவு ?

(ஆ) சென்னை உயர்நீதி மன்றத்தில் தடை உத்தரவில் நடவடிக்கை எடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்ட நிலத்தின் அளவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) 9,945 ஏக்கர்கள்.

(ஆ) 2,362 ஏக்கர்கள்.